செ.வெ.எண்:03/ஜீன் நாள்:03.06.2021

**தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.21. 47 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூ.21.47 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

தருமபுரி மாவட்டத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின்கீழ் இதுவரை 8437 மனுக்கள் வரபெற்றுள்ளது பொது மக்கள் அளித்துள்ள மனுக்கள் மீது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 100 நாட்களில் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள் . அதன்படி ஒவ்வொரு கோரிக்கை மனுவின் மீதும் அதிக அக்கறை கொண்டு மனுவின் உண்மைத்தன்மையை நேரில் சென்று ஆய்வு செய்து தகுதியுடைய நபர்களுக்கு அரசின் நலத்திட்ட உதவிகள் கிடைக்க அதிக முனைப்புடன் அரசுத்துறை அலுவலர்கள் செயல்பட வேண்டும். மாவட்டத்தில் 169 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் உடனடியாக வழங்கப்படுகிறது. இதில் 274 தகுதியான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மீதம் உள்ள அனைத்து மனுக்களும் தொடர்புடைய அலுவலர்கள் மூலம் தணிக்கை மற்றும் விசாரணை செய்து தகுதியின் அடிப்படையில் தீர்வு காணும் வகையில் உரிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு நலத்திட்டங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்களை உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம் செயலி மூலமாக கணிணியில் பதிவேற்றம் செய்யப்பட்டு வருகிறது.

மேலும் வீட்டுமனை பட்டா ,முதியோர் உதவித்தொகை ,மின்னணு குடும்ப அட்டை, இலவச வீடு, ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குக்கிராம பகுதியில் புதிய குடிநீர் இணைப்புகள் மற்றும் ஊரக வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் சார்பில் தார்சாலை,சிமெண்ட் சாலை அமைத்தல்,புதிய வழித்தடத்தில் பேருந்து வசதி ஏற்படுத்துதல் போன்ற அடிப்படை

பணிகளை கவனம் செலுத்தி பணியாற்றவேண்டும். பல்வேறு கோரிக்கை மனுக்கள் மீது துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். உள்ளிட்ட பல்வேறு கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட அலுவலர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மனுவின் மீது நடவடிக்கை எடுக்க கூடுதல் தகவல்கள் எதுவும் தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட மனுதாரரிடம் பெற்று ஆய்வு செய்ய வேண்டும். தகுதியுடைய அனைவரும் பயன் பெறுகின்ற வகையில் கோரிக்கை மனுக்களை பரிசீலித்து விரைவாக தீர்வு காண அனைத்து துறை அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டுமென அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் தகுதியுடைய மனுக்கள் ஆராய்ந்து துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு நலத்திட்ட உதவிகள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ராமமூர்த்தி, தருமபுரி சார் ஆட்சியர் திரு.மு.பிரதாப்,இஆப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.கவிதா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமதி.சாந்தி உள்ளிட்ட இதர அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**